## நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2020–ம் ஆண்டு ஜுலை மாதம் 06–ம் தேதி ( 06.07.2020) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றப்பொருள் .1.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP) 2020–2021 ன் கீழ் அரசு மானியம் பெற்று மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள சாலைகளை ரூபாய் 110.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2020–21ம் ஆண்டின் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட அனுமதி குழு நாள் . 02.07.2020 ன் படி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியுள்ளது .

(ரூ. இலட்சத்தில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|
| **110.00** | **82.50** | **27.50** |

மேற்படி பணிக்கு . சென்னை , நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளதால் கீழ் கண்ட படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடிற்கும் , ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| **சிப்பம் எண்** | **பணியின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீடு ரூ. (லட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 2 . வான்பாக்கம் கிருஷ்ணநகர் , வார்டு எண் 9 . திரு,.வி.க சாலை , வார்டு எண் 10 . ராமு தெரு , வார்டு எண் 11 . ராஜிவ் காந்தி நகர் விரிவாக்கம் , வார்டு எண் 14 . திருக்கண்டேஸ்வரம் தோப்பு தெரு & பிள்ளையார் கோயில் தெரு , வார்டு எண் 14 . திருக்கண்டேஸ்வரம் தோப்பு தெரு சுடுகாட்டு சாலை . வார்டு எண் 18 . வைத்தியநாதன் தெரு, வார்டு எண் 23 . காயிதேமில்லத் நகர், வார்டு எண் 23. மௌலானா அப்துல் ரஹமான் தெரு , வார்டு எண் 23. பெரிய தெரு , வார்டு எண் 23. தைக்கால் தெரு , வார்டு எண் 24 . தந்தை பெரியார் தெரு சந்து , வார்டு எண். 26 ரஹமத் நகர் மற்றும் வார்டு எண் 29 . கீழ்பாதி மெயின் ரோட்டில் தார் சாலை அமைத்தல் பணி | 2.905 | 110.00 |
| | மொத்தம் | 2.905 | 110.00 |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி சாலைப் பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத் திட்ட நிதியினை விட கூடுதலாகும் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1506 /2020/இ1**

**தீர்மான எண் : 93 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .2.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான சுதாகர் நகர் , பத்மாவதி நகர் மற்றும் K.N. Nagar பகுதிகளில் தெருவிளக்கு வசதி இல்லாமல் அப்பகுதி மக்கள் சிரமப்படுகிறார்கள். மேலும் இரவு நேரங்களில் சாலையில் நடந்து செல்ல இயலாமல் உள்ளதாலும் அப்பகுதியில் தெருவிளக்கு அமைத்து தருமாறு பொது மக்கள் கோரியதற்கிணங்க அவசர அவசியம் கருதி மதிப்பீடு தயார் செய்து தமிழ் நாடு மின் பகீர்மான கழகம் , நெல்லிக்குப்பத்திற்கு அனுப்பி வைக்கவும் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .**

**(ந.க.எண்.4922 /2018/இ1)**

**தீர்மான எண் : 94 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .3.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட முள்ளிகிராம்பட்டு கிராமம், வார்டு– B, பிளாக்–10, T.S.No.36/2, இடத்தின் பரப்பு 137214 சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு.அப்துல் அமீது என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண்R1293/2018 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு **08.06.2020**ல் வரப்பெற்றுள்ளது. பவர் சிட்டி 2 மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் 18.03.2020ல் தானப்பத்திரம் மூலம் பெற்றப்பட்டுள்ளது. அதன் நகல்

மட்டுமே நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. எனவே, வரன்முறை செய்த மனைப்பிரிவு வரைபடத்தினை வரன்முறை செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

முள்ளிகிராம்பட்டு கிராமம், வார்டு– B, பிளாக்–10, T.S.No.36/2, ல் பரப்பு 137214 சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R1293/2018 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை உதவி இயக்குநர் விழுப்பரம் அவர்களால் 18.03.2020ல் தானம் பெறப்பட்டுள்ளது. மனுதாரர் முழுமையாக (அ) பகுதியாக கட்டணங்கள் செலுத்த உதவி இயக்குநர் தெரிவித்துள்ளதால், தொகையினை பெற்றுக்கொண்டு மனைப்பிரிவினை வரன்முறை செய்யலாம்.

ந.க.எண்:- **2921/2019/F1**

**தீர்மான எண் : 95 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி